
Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

Regd. No.
TN / CC (S) DN / 119 / 09-11

Lincensed to Post without prepayment
WPP No. TN / CC (S) DN / 51 / 09-11

வேணு : 16 அக்டோபர் 2010 கானம் : 3



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Related Websites : www.namadwaar.org
Email:contact@namadwaar.org

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




வேணு : 16 அக்டோபர் 2010 கானம் : 3



ஆகஸ்டு 26 –தாமரைப்பாக்கம் – ரங்கநாதர் தியானமண்டபம் திறப்பு விழா



ஆகஸ்டு 30 – திருச்சி நாமத்வார் ஒருங்கிணைப்பாளர்கள் சந்திப்பு



திருவையாற்றில் பாண்டுரங்கன்



குடியாத்தம் அருகே கே.வளசை கிராம கோவில் கும்பாபிஷேகம் ஆகஸ்டு 22



12/9/2010 சென்னை பாரதிதாசன் காலனி புவனேஸ்வரி அம்மன் கோவிலில்






கருட வாஹனம் – ஜய ஆஞ்சநேயர் ஸன்னதி– 4/9/2010



மதுராசல மலை மீது கோவிந்த பட்டாபிஷேகம் – 5/9/2010



ப்ருந்தாவன குடில் அலங்காரம் – நிகுஞ்சோத்ஸவம் – 7/9/2010



நிகுஞ்சோத்ஸவத்தன்று – உபன்யாசம் – 7/9/2010





மஹாரண்யம் ஸ்ரீகல்யாணஸ்ரீநிவாச பெருமாள், வீர ஆஞ்சநேயர்



மஹாரண்யம் ஜய ஹனுமான் –உத்ஸவத்தின்பொழுது



தெப்போத்ஸவம் – அன்னவாஹனம் – 9/9/2010



தெப்போத்ஸவத்தின்பொழுது – 9/9/2010





பூஜாமண்டபத்தில் ஸ்ரீஸ்வாமிஜி



திவ்யதம்பதிகள் ஊஞ்சலில் – ஜானவாசத்தன்று – 8/9/2010


மஹாரண்யம் ஸ்ரீ மாதுரிஸகீ ஸமேத பிரேமிகவரதன் - 17வது பிரும்மோத்சவம்

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 16 அக்டோபர் 2010 கானம் : 3

| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 174 | 03 | திருவையாற்றில் பண்டரிபுரம் | 13 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 07 | சாதகரின் டைரிக்குறிப்பு-4 | 06 |

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

ஹே ஸ்தோகக்ருஷ்ண ஹே அம்ஶோ ஸ்ரீதாமன் ஸுபலார்ஜுன।
விஶாலர்ஷப தேஜஸ்வின் தேவப்ரஸ்த வரூதப॥ (பா-10-22-31)
பஶ்யதைதான் மஹாபாகான் பரார்தைகாந்த ஜீவிதான்।
வாதவர்ஷாதப ஹிமான் ஸஹந்தோ வாரயந்தி ந:॥ (10-22-32)

பசுக்களை மேய்க்கையில் வெயிலில் தங்களுக்கு நிழல்களாய் குடை போல் இருக்கும் மரங்களைப் பார்த்து , கோபர்களுக்கு கிருஷ்ணன் சொன்னது:
"ஏ குட்டிக்ருஷ்ணா! ஏ அம்சோ! ஏ ஸ்ரீதாமன்! ஏ ஸுபல! ஏ அர்ஜுனா! ஏ விசால! ஏ ரிஷப! ஏ தேஜஸ்வின்! ஏ தேவப்ரஸ்த! ஏ வருதப! பிறருக்கு முழுவதும் உபயோகமாகும் பிழைப்பை உடையவைகளும் அதனால் மஹாபாக்யம் பெற்றவைகளுமான இந்த மரங்களை பாருங்கள். காற்று, மழை, வெயில், பனி இவைகளை தாங்கள் பொறுத்துக்கொண்டு நம்மை அவைகளிலிருந்து காப்பாற்றுகின்றன".

ஸஜ்ஜனங்களிடம் வந்த யாசகர்கள் போல் இந்த மரங்களிடம் வந்த யாசகர்கள் பயனடைகின்றனர். ஸமஸ்த பிராணிகளுக்கும் வாழ்வை கொடுக்கிறதான இவைகளின் பிறப்பே ஆச்சரியம்.



# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகமாலிகை (சின்னஞ்சிறு கிளியே மெட்டு) தாளம்: ஆதி - திஸ்ரம்

### பல்லவி

காபி: சின்னஞ்சிறு தளிரே ராதே - அதில் தோன்றிடும் குருமலரே
கண்ணன் நாமம் தனை உலகில் ஏற்றம் புரிய வந்தாய்
(சின்னஞ்..)

### அனுபல்லவி

காபி: தங்கப்பதுமை ஒன்று உயிர் பெற்று அங்கமசைதல் கண்டேன்
குயிலின் குரலும் கிளியின் கொஞ்சலும் தஞ்சமடைய கண்டேன்
(சின்னஞ்..)

### சரணங்கள்

மாண்டு:ஓடி வருகை கண்டால் கண்ணன் உனை வாரியணைக்கின்றான்
நீ பாடி திரிதல் கண்டால் கண்ணன் அங்கு ஆடி மகிழ்கின்றான்
(சின்னஞ்..)

வஸந்தா:நீ கொஞ்சி பேசுகையில் கண்ணன் நெஞ்சம் குளிருதடி
நீ அஞ்சி அணைக்கையிலே கண்ணன் கள்ளம் சிரிக்கின்றான்
(சின்னஞ்..)

திலங்: கன்னத்தில் முத்தமிட்டால் கண்ணன்தான் காணாமல் போகின்றான்
ஊரார் உனை புகழ்ந்தால் கண்ணன் தன் பாக்யத்தை நினைக்கின்றான்
(சின்னஞ்..)

வலசி: இன்பக்கதைகள் எல்லாம் இனி அவன் காதில் ஏறிடுமோ
அன்பொன்றினால் அவனை ராதே தன் வசமாக்கி விட்டாய்
(சின்னஞ்..)

இந்தோளம்: கண்ணனின் காதல் பித்து உந்தன் தலைக்கு ஏறியதா?
மன்னன் அவன் என்றும் நீந்தன் காலடியில் அன்றோ?
(சின்னஞ்..)

சிவரஞ்சனி: உன் கண்ணில் நீர் வழிந்தால் கண்ணன் இந்த ஜகத்தினை
அழித்திடுவான்
நீ வேறு அவன் வேறோ ராதே உன் உயிர் அவனதன்றோ
(சின்னஞ்..)

# மதுரமான மஹனீயர் - 175

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

மனித பிறவி எடுத்தலும், உத்தமமான ஸத்குருநாதரின் சங்கம் கிட்டுவதும் மிக அரிது. அப்பேர்ப்பட்ட குருநாதரின் அருளினால் முக்தி கிடைக்க பெறுவதே மனிதபிறவியின் இலட்சியம். முக்தி அடைவதே மனித பிறவியின் இலட்சியம் என ஸ்ரீமத்பாகவதமும், ஸகல ஸாஸ்திரங்களும் போதிக்கின்றன என ஸ்ரீஸ்வாமிஜி பன்முறை கூறி உள்ளார் அல்லவா?

இருப்பினும், ஒரு குருவானவர், தமது சீடனின் உலக வாழ்விற்கு தேவையானவற்றை, பூரணமாக தந்து அருளுவார். ஸ்ரீஸ்வாமிஜி, தம்மை அண்டியோரின் மிக சிறிய தேவைகளை கூட, எப்படி பூர்த்தி செய்கிறார் என்பதை சத்சங்கத்தினர் அறிவர். அப்படி ஒரு நிகழ்ச்சியை, இங்கு பகிர்ந்து கொள்ள நான் பிரியப்படுகிறேன்.



நமது சத்சங்கத்தை சேர்ந்த திரு.வெங்கடேசன் குடும்பம், ஸ்ரீஸ்வாமிஜியிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டது. நங்கநல்லூரிலிருந்து வரும் இவரின் தந்தை, திரு.குருமூர்த்தி பிரதிவருடம் ஹரித்வார் மற்றும் ரிஷிகேசம் யாத்திரை சென்று வருவார். இவ்வருடமும் அவருக்கு, அங்கு செல்ல, ஆசை இருந்து வந்தது. திரு.வெங்கடேசனின் தாய் திருமதி.நீலாயதாக்ஷிக்கு காலில் வலி இருந்ததால், இதை தள்ளி போட்டு வந்தனர். இருப்பினும், குருமூர்த்தி அவர்கள் எப்படியேனும்



யாத்திரை செல்ல முடிவு செய்தார். செல்லும் முன், வந்து, ஸ்ரீஸ்வாமிஜியின் ஆசிகளை பெற்று சென்றார். அவரது துணைவியாருக்கு காலில் வலி இருந்ததால், பிரத்யேகமாக இதற்கென ஒரு ஸ்பெஷல் காலணியை புதிதாக வாங்கி அணிந்து சென்றார். 76வயதானாலும் குருமூர்த்தி தன் துணைவியாருடன் தனித்தே சென்றார்.

ஹரித்வாரில் முதல் நாள் தரிசனம் முடிந்தது. அங்கு தங்கி விட்டு, அடுத்த நாள் ரிஷிகேசம் செல்வதாக ஏற்பாடு. புது காலணி வெங்கடேசனின் தாயின் காலை நன்கு கடித்து விட்டது. நல்ல வீக்கம் வந்து விட்டது. இருப்பினும், தம்பதிகளிருவரும் மறுநாள் ஒரு காரில் ரிஷிகேசம் புறப்பட்டு சென்றனர். அங்கு இறங்கி நடக்கையில், வெங்கடேசனின் தாய்க்கு, காலில் செருப்பு கடித்த இடத்தில், தோல் கிழிந்து ரத்தம் வர ஆரம்பித்து விட்டது. துணியினால் அடைத்து பார்த்தும் அது நிற்கவில்லை. சர்க்கரை உபாதை வேறு இருந்ததால், ரத்தம் நிற்காததினால், அவருக்கு கடும் அசதியாகி விட்டது. ஒரு சமயத்தில் தன் கணவரிடம் "எங்கிருந்தாவது பிளாஸ்திரி வாங்கி வாருங்கள். மேற்கொண்டு நடக்க இயலாது" என்றபடி அப்படியே அமர்ந்து விட்டார். மேலும் நம் ஸ்ரீஸ்வாமிஜியை பன்முறை "குருஜி! என்னை எப்படியாவது காப்பாற்றுங்கள். நீங்களே துணை" என மனதாலும் வாய்விட்டும் பிரார்த்தித்தவாறு இருந்தார்.

வெங்கடேசனின் தந்தை குருமூர்த்தியும் பல இடங்களில் விசாரித்தும், யாதொரு மருந்து கடையும் கண்ணில் படவில்லை. அன்று ஏதொவொரு "பந்த்"தாம்; ஒரு கடையும் திறந்து இருக்கவில்லை. தட்டு தடுமாறி வேறு வழி இல்லாததால், இருவரும், உதவி தேடி நடந்து சென்றனர். சிறிது தூரம் சென்ற பின், ஒரு கடை தென்பட்டது. சிறு டப்பாக்கள் கொண்ட ஓமியோபதி கடை போல் தென்பட்டது அது. குருமூர்த்தி அக்கடையில் விசாரித்தார். கடைக்காரருக்கு இந்தி மட்டும்தான்

தெரிந்து இருக்கிறது. குருமூர்த்தி அவர்களுக்கோ, இந்தி சுத்தமாக தெரியாது. வெங்கடேசனின் தாய், தனது காலை காண்பித்து, சைகையின் மூலம் "பிளாஸ்திரி" வேண்டும் என கடைக்காரருக்கு புரிய வைத்தார். காலில் ரத்தம் வடிவத்தை பார்த்தவுடன், என்ன கேட்கிறார்கள் என புரிந்து கொண்டார் கடைக்காரர்.

ஆனால் என்ன செய்வது! அது ஒரு ஊறுகாய் கடையாம்! அங்கு எப்படி பிளாஸ்திரி இருக்கும்! கடைக்காரர் கையை விரித்தார். வருத்தமுடன் அவர்கள் மேற்கொண்டு செல்ல எத்தனிக்க, கடைக்காரர் மறுபடி அழைத்தார். தனது கடை மேஜை டிராயர்களில் மூன்றை மாறி மாறி திறந்தவர் சற்று சந்தோஷத்துடன் ஒரே ஒரு பிளாஸ்திரியை எடுத்தார். என்றோ அவர் வைத்ததாம். அந்த பிளாஸ்திரியை திரு.வெங்கடேசனின் தாயால் சுயமாக குனிந்து ஒட்டி கொள்ளக்கூட முடியவில்லை. கடைப்பையனே வந்து சரியாக ஒட்டி விட்டான். உதவிக்கு பணம் எதுவும் கடைக்காரர் வாங்க மறுத்துவிட்டார். (கஷ்டம் தீர்ந்தது மட்டுமல்ல. சென்னை வரும் வரையில் அதே பிளாஸ்திரியோடுதான் அவர் வந்தார்! )

அப்பொழுதுதான் வெங்கடெசனின் பெற்றோர், கடையின் போர்டை பார்த்தனர். "**முரளி ஸ்டோர்ஸ்**" என்று அது தெளிவாக எழுதப்பட்டு இருந்தது. நம் ஸ்ரீஸ்வாமிஜியின் நாமம் அதுதானே! புல்லரித்தது தம்பதிகளிருவருக்கும். உடன் மானசீகமாய் ஸ்ரீஸ்வாமிஜியை வணங்கினர். ஸ்ரீமந்நாராயணனுக்கு ஆயிரக்கணக்கில் கைகள் என்று புருஷ சூக்தம் கூறுகிறது. அஃதாவது எல்லா கைகளும் அவனுடையதே. எப்படி வேண்டுமானாலும் அவன் உபயோகப்படுத்துவான். குருநாதருக்கும் இது சால பொருந்தும் அல்லவா? குரு என்பவர், ஆறடி சரீரம் கொண்டு இலகுபவர் மட்டுமல்லவே? அவர் சர்வ வியாபி அல்லவா? அதனால் நாமம் கொண்டு அழைத்தவுடன், உதவிக்கு வந்து விட்டார்.



## ஒரு சாதகரின் டைரீக்குறிப்பு – 4



தினமும் பல மணி நேரம் ஜபம், தியானம், மௌனம், கீர்த்தனம் என்று என்னுடைய நாட்களை கழித்து கொண்டிருந்தேன்.

அவ்வப்பொழுது, அப்படி இருந்து கொண்டிருக்கும்பொழுது, என் மனதில் ஒரு கவலை எழும். தினமும் இவ்வளவு நேரம், தெய்வீகமான விஷயங்களில் நேரத்தை செலவழிக்கின்றோம். ஆனால், நம்மிடத்தில் ஒரு மாற்றத்தையும் காண முடியவில்லையே என்ற கவலை அடிக்கடி எழும். ஒரு முன்னேற்றமும் காணப்படாததால், நம்முடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என்ற கேள்வி எழும். அது ஒரு கவலையாக மாறும். திரும்ப திரும்ப சாதனைகளுக்கு நடுவே, இப்படி ஒரு எண்ணம் வந்து அலைக்கழிக்கும்.

இப்படியாக இருந்துகொண்டிருக்கும்பொழுது, ஒருநாள் தியானமா அல்லது கனவா என்று அறிய முடியாதபடி ஒரு நிலை; அப்பொழுது அசரீரி போன்ற ஒரு குரல் மட்டும் தெளிவாக கேட்டது. "ஜபம், தியானம் போன்ற சாதனைகளில் ஈடுபடுவதுதான் உன் வேலை. என்ன முன்னேற்றம் ஏற்படுகின்றது என்று கவலைப்படுவதோ அல்லது எதிர்காலத்தை பற்றி கவலைப்படுவதோ, உன் வேலை இல்லை. இந்த இரண்டு விஷயத்தையும் மனதிலிருந்து எடுத்து விடு. மற்றவை தானாக நடக்கும்" என்றது.

அன்று முதல், அப்படியே இருந்து வர முயற்சிக்கின்றேன்.



## பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

**கேள்வி கேட்பவர் : ஆசாரம் என்பது வெளி அடையாளம் மட்டுமா? அல்லது அந்தரங்க சுத்தியுடன் கூடியதா?**

பதில்: நிச்சயமாக அந்தரங்க சுத்தியுடன் கூடியதுதான்.

**கேள்வி கேட்பவர் : அப்படி இருக்க பலர் வெளிப்படையான ஆசாரங்களுக்கு மட்டும் முக்கியத்துவம் தருவது ஏன்?**

பதில்: நாம் ஒருவரை பார்க்கின்றோம். அவர் நல்ல உடை உடுத்தியிருக்கின்றாரா அல்லது அழுக்கான சுமாரான உடை உடுத்தியிருக்கின்றாரா என்பதை, பார்த்த உடன், கண்டு பிடித்து விடுகின்றோம். அவர் அழகாக இருக்கின்றாரா இல்லையா என்பதையும், பார்த்தவுடன், கண்டுபிடித்து விடுகின்றோம். ஆனால் அவர் நல்லவரா இல்லையா என்பதை, நாம் பார்த்த உடனே, கண்டுபிடிக்க முடியுமா? முடியாது. காரணம், மேல் இரண்டும், நம் ஊனக்கண்களுக்கு புலப்பட்டது போல், மனது நமக்கு புலப்படுவதில்லை. அதுபோல்தான் வெளி அடையாளங்கள் கண்களுக்கு தெரிகின்றது. அந்தரங்க சுத்தி தெரிவதில்லை. பிறருக்காக மட்டும் ஆசாரத்தை கடைப்பிடிக்க நினைப்பவர்கள், வெளி விஷயத்திலேயே, கவனமாக இருந்து, அத்துடன் நிறுத்திக்கொண்டும் விடுகின்றனர். சிலருக்கோ, தாங்கள் அத்தகைய ஆசாரத்துடன் இருப்பதே, பரிபூர்ணம் எய்தி விட்டதாக தோன்றவும் செய்கின்றது.

**கேள்வி கேட்பவர் : எல்லோரையும் நாமகீர்த்தனம் செய்ய சொல்கின்றீர்கள். எல்லோரும், துக்காராம், நாமதேவர் போன்று ஆகி விடமுடியுமா என்ன?**

பதில்: முடியாதுதான். அதுதான் உண்மை. அதேபோல், பிராணாயாமம் செய்பவர்கள் எல்லோரும், பதஞ்சலி ஆகிவிட முடியாது. ஆத்மவிசாரம் செய்பவர்கள் எல்லோரும், ரமணராகி விட முடியாது. கர்ம அனுஷ்டானங்கள் செய்பவர்கள் எல்லோரும் ரிஷிகள் ஆகி விட முடியாது. கல்யாணம் செய்து கொள்ளாதவர்கள் எல்லோரும், பீஷ்மராகி விட முடியாது.





அவரவர்களால் முடிந்த, பகவத்விஷயமான ஒரு ஸத்கர்மாவை செய்து வரவேண்டும், என்பதுதான் தாத்பர்யம். இல்லாவிட்டால், மனித ஜன்மம் எடுத்ததே வீண். அதில் எல்லோராலும், அதுவும் இன்றைய காலகட்டத்தில் சுலபமாக பின்பற்றக்கூடியது, சாஸ்திர சம்மதமானது பகவந்நாமா என்பதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது.

**கேள்வி கேட்பவர் : நாம் செய்கின்ற நல்ல காரியங்களை பிறருக்கு தெரியாமல் மறைக்க வேண்டும் என்கின்றார்களே? மறைப்பது என்றால் எப்படி மறைப்பது? எனக்கு புரியவில்லையே!**

பதில்: நாம் செய்கின்ற தவறுகளையும், பாபத்தையும், தீமையையும் பிறருக்கு தெரியாமல் எப்படி மறைக்கின்றோமோ, அப்படி மறைத்தால் போதும்.

**கேள்வி கேட்பவர் : பல பக்தர்கள் தங்களது பாடல்களில் சிவனை குறைத்தும் விஷ்ணுவை குறைத்தும் பாடியிருக்கின்றார்களே! அது எப்படி சரியாகும்?**

பதில்: எந்த பக்தரும், இதை தாங்களாக பாடவில்லை.ஏதோ ஒரு இதிஹாஸம் அல்லது புராணத்தில் உள்ள விஷயத்தை எடுத்துத்தான் அவர்கள் பாடியிருப்பார்கள். ஆகவே அப்படி அவர்கள் பாடியதற்கு, அந்த புராணத்தை எழுதியவர்கள்தான் பொறுப்பே தவிர, பாடியவர்கள் அல்ல.

Our Humble Pranams to the Lotus feet of
His Holiness Sri Sri Muralidhara Swamiji



Gururam Consulting
Private Limited





# பாகவத பழம் 7

**இரண்டாம் பாகம்**

– ஸ்ரீஸ்வாமிஜி

பரீக்ஷித் பகவானை கர்ப்பத்தில் தரிசனம் செய்யும் வரை, மாம்ஸ சரீரமாக இருந்தது, பரீக்ஷித்தின் சரீரம். கர்ப்பத்தில் சுதர்ஸனசக்ரம் பரிபூர்ணமாக, இவனுடைய மாம்ஸ சரீரத்தை சுற்றிக்கொண்டு நின்றதால், பரீக்ஷித் சரீரம் திவ்யசரீரமாக மாறிவிட்டது.

திவ்யசரீரம் அடைந்த அவனுக்கு பல ஆச்சர்யமான ஸித்திகள் இயல்பாகவே ஸித்தித்திருந்தன. பாகவதோத்தமர்கள் அத்தகைய மஹிமைகளை, ஸித்திகளை தங்களுடைய பெருமையை காண்பிப்பதற்காகவோ அல்லது அல்ப பலன்களுக்காவோ பயன்படுத்தமாட்டார்கள். ஆகவே, வாழ்நாள் முழுவதும் அத்தகைய ஸித்திகளும், மஹிமைகளும் தனக்கு இருப்பதாகவே அவன் நினைத்துக்கொள்ளவில்லை. ஆனால், அதற்கு ஒரு அவசியம் வந்தது. பிராம்மண குமாரனின் சாபத்தை எதிர்பார்த்திருந்தான். ஏன்?

அவன் பிறந்தபொழுதே, அவனுடைய ஜாதகத்தைப் பரிசீலித்த தெய்வக்ஞர்களான ஜோதிஷர்கள், அதைக் கூறியிருந்தார்கள். நிச்சிந்தையாக ஸ்ரீமத்பாகவதம் கேட்க ஆசைப்பட்டான். "நான் இந்த சரீரத்தோடு கிளம்பிப் போனால், சொந்த பந்தங்கள், பரிவாரங்கள் எல்லோரும் கூட வருவார்கள். அவர்களுக்கு நமக்கு இருக்கின்ற விவேகம் கிடையாது. அழுது, தொந்தவு செய்து நம்முடைய அமைதியைக் குலைத்து விடுவார்கள்.'' ஆகவே, நிச்சிந்தையாக கதை கேட்க ஒரு யுக்தி செய்தான். ஸ்தூல சரீத்தை சொந்த பந்தங்களிடையே இருக்கச் செய்து, தானும் ஒரு அக்ஞானி போல் நடந்துகொண்டான். அவர்களுக்கு தகுந்தாற்போல் பரிகாரம், யுக்தி என்பதற்கு எல்லாம்

இடம் கொடுத்தான். யாருக்கும் தெரியாமல், திவ்ய சரீரத்தை எடுத்துக்கொண்டு, கங்கைக் கரைக்கு சென்று நிச்சிந்தையாக பாகவதம் கேட்டு பகவானை அடைந்தான். ராஜநீதிகளையும், உலகத்தின் பலவிதமான போக்குகளையும், உலகவிஷயமான அறிவுரைகளையும் கூற வந்த மஹாபாரதம் பரீக்ஷித்தின் ஸ்தூலசரீரம் பற்றிய விஷயத்தை எடுத்துக் கொண்டது. ஏன் என்றால், உலக விஷயத்தைப் பற்றிப் பேசவந்த ஒரு இதிகாசம் உலகப்போக்கை ஒட்டிய பரீக்ஷித்தின் செய்கையை காண்பித்தது. பக்தி, விரக்தி, ஞானம் போன்றவற்றை சொல்ல வந்த ஸ்ரீமத் பாகவதம், பரீக்ஷித்திற்குள் ஒளிந்துகொண்டிருந்த பரம பாகவத சரீரம் என்ன செய்தது என்பதைக் காட்டுகின்றது. இரண்டும் சரிதானாம்! இதைப் புரிந்துகொண்டால், சந்தேகங்கள் விலகும். நாம் இந்த அளவிற்காவது புத்திசாலியாக இருப்போம் என்ற வியாஸருடைய எதிர்பார்ப்பு பொய்யானதுதான் இவ்வளவு சங்தேகங்களுக்கும் காரணம்.



ஸ்ரீமத்பாகவதம் படிப்பவர்கள் தனியாக பகவத்கீதை படிக்கவேண்டாம். ஏன்? பகவத்கீதைக்கு சங்கர, ராமானுஜ, மத்வ பாஷ்யங்கள் பிரஸித்தமானது. இதை த்ரிமதஸ்தர்களுடைய பாஷ்யம் என்று விஷயம் தெரிந்தவர்கள்

ஸ்ரீமத்பாகவதம் படிப்பவர்கள் தனியாக பகவத்கீதை படிக்கவேண்டாம். ஏன்? . தான் செய்த பகவத்கீதைக்கு வியாஸர் செய்த பாஷ்யம்தான் ஸ்ரீமத்பாகவதம்.



கொண்டாடுவார்கள். இதற்குப் பிறகும், எவ்வளவோ பெரியவர்கள் பகவத்கீதைக்கு பாஷ்யம் செய்துள்ளார்கள். எல்லாம் இருக்கட்டும்; தான் செய்த பகவத்கீதைக்கு வியாஸர் செய்த பாஷ்யம்தான் ஸ்ரீமத்பாகவதம். பகவத்கீதையில் அர்ஜுனன் பகவானைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கின்றான்.

அயதி: ஶ்ரத்தயோபேதோ யோகாச்-சலித-மானஸ:

அப்ப்ய யோக-ஸம்ஸித்திம் காம் கதிம் க்ருஷ்ண கச்சதி (16-37)

கச்சின்னோபய-விப்ரஷ்டச் சின்னாப்ர-மிவ நஶ்யதி

அப்ரதிஷ்டோ மஹாபாஹோ விமூடோ ப்ரஹ்மண: பதி (16-38)

உன்னை அடைவதற்காக ஒருவன், உண்மையாக பிரயத்தனப்படுகின்றான். அப்படி பிரயத்தனப்பட்டவன், சிலகாலம் கழித்து, பகவானுடைய மாயையினால், அந்த தெய்வீக வாழ்க்கையிலிருந்து விலகிவிடுகிறான். அவனுடைய கதி என்ன? உன்னை அடைவதற்காக, தீவிரமாக ஒருவன் சாதனைகளில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றான். உன்னுடைய தரிசனம் கிடைப்பதற்குள், பிராரப்தத்தினால் அவனுக்கு மரணம் வந்துவிடுகின்றது. அவனுடைய கதி என்ன? என்ற இந்த இரண்டு பேர்களின் நிலையைக் குறித்து அர்ஜுனன் வினவுகின்றான். அதற்கு பகவான் பதில் சொல்லும்பொழுது, இவர்கள் வாழ்ந்த வாழ்க்கை வீணாகவே போகாது. மரணத்திற்குப் பிறகு, உலகத்திலேயே மிகவும் புண்ணியம் செய்தவர்கள் எந்த உலகத்தை அடைவார்களோ, அதை அடைந்து, அங்கு வெகுகாலம் வாஸம் செய்து, பிறகு உயர்ந்த, சத்தான (பாரம்பரியமான சிறந்த) குடும்பத்தில் வந்து பிறந்து, தனது சாதனைகளைத் தொடர்ந்து செய்து என்னை அடைவார்கள்" என்கின்றார்.

(கனியும்)

# திருவையாற்றில் ஒரு பண்டரீபுரம் - குள்ள ஹரி

கவலைகள் இல்லாமல் உலக வாழ்க்கை இராது. அந்த கவலைகளும் அவரவர் அந்தஸ்துக்கு தகுந்தாற்போல் பலவிதமாகும். அப்படிப்பட்ட கவலைகளிலும், சில அவசியமான கவலைகள், பல அநாவசியமான கவலைகள் ஆகும். காலாகாலத்தில், பெண்குழந்தைக்கு கல்யாணம் செய்ய வேண்டும் என்பது எல்லா பெற்றோருக்கும் உள்ள நியாயமான கவலை. இதில் மாற்று அபிப்ராயமே இருக்க முடியாது.



ஜனக மஹாராஜாவோ ஞானி. அவரே சீதைக்கு காலாகாலத்தில் கல்யாணம் ஆக வேண்டுமே என்று கவலைப்பட்டார். கல்யாணம் செய்ய வேண்டும் என்பது கடமையாக இருந்தாலும், அதில் பெரிய பொறுப்பு உள்ளது. தன்னுடைய குழந்தையை ஆயுள் முழுவதும், கஷ்டப்படாமல் அன்புடன் வைத்து கொள்பவனாக பார்க்க வேண்டும்.

இப்படித்தான் திருவையாறு பக்கத்தில், பல வருடங்களுக்கு முன் ஒரு பெண் குழந்தை இருந்தாள். பக்த விஜயத்தில் உள்ள பக்தர்களின் கதையை தன் வீட்டில் உள்ள பெரியவர்கள் மூலம் கேட்டு கேட்டு, அவளுக்கு பாண்டுரங்கனிடம் அப்படி ஒரு பக்தி சித்தித்தது. பெற்றோர்கள் அந்த பக்தையான பெண்குழந்தைக்கு, ஒரு நல்ல வரனாக பார்த்து, கல்யாணம் செய்து வைக்க விரும்பினார்கள். முதலில் அந்த பெண்குழந்தை கல்யாணத்திற்கே சம்மதிக்கவில்லை. பின் எப்படியோ அந்த குழந்தையை சம்மதிக்க வைத்தார்கள். ஆனால் அதற்கு அந்த பக்தை ஒரு CONDITION போட்டாள். அதாவது தன்னுடைய கல்யாணம் பண்டரீபுரத்தில், அதுவும் பாண்டுரங்கனுடைய சன்னதியில் நடக்க வேண்டும் என்று சொன்னாள். பெற்றோர்களும்



சம்மதித்தனர். சம்மதித்து விட்டனரே தவிர, அது நடக்கின்ற விஷயமாக தெரியவில்லை. பண்டரிபுரம் எங்குள்ளது? கல்யாணத்துக்கு வேண்டிய அத்தனை பொருட்களையும் எடுத்துக்கொண்டு, சொந்த பந்தங்களுடன் எப்படி போவது? மொழி வேறு ஒரு பெரிய பிரச்னை; அந்த காலத்தில் போக்குவரத்து போன்ற நவீன வசதிகள் எதுவும் கிடையாது; தனவந்தர்களான பெற்றோர்கள் யோசித்தார்கள். பாண்டுரங்கனுடைய கோவில் ஒன்றை, புதியதாக நிர்மாணித்தார்கள். அந்த பெண்குழந்தையை அழைத்து வந்து இதுதான் பண்டரிபுரம் என்றும் சொல்லிவிட்டார்கள். அவள் ஆசைப்பட்டபடியே பாண்டுரங்கன் சன்னதியில் திருமணம் நடந்தது. திருமணம் முடிந்து, அந்த பெண் வெளியில் வந்து பார்த்தால், அட! நம்ம திருவையாறு; பெற்றோர்கள் செய்த தந்திரத்தை புரிந்து கொண்டாள். முதலில் சற்று வருத்தமடைந்தாலும், தனக்காக பெற்றோர்கள் பாண்டுரங்கனையும், பண்டரிபுரத்தையுமே திருவையாற்றிற்கு கொண்டு வந்ததை பார்த்து, சந்தோஷமடைந்தாள்.

ஜனக மஹாராஜாவோ ஞானி. அவரே சீதைக்கு காலாகாலத்தில் கல்யாணம் ஆக வேண்டுமே என்று கவலைப்பட்டார்.

அந்த பாண்டுரங்கனுடைய கோவில் இன்றும் திருவையாற்றில் காவிரிக்கரையில் சிறியதாக உள்ளது. பக்கத்தில் உள்ள கட்டடங்களுடைய அமைப்பு கோவிலின் பிரகாரம் போன்று அமைந்திருப்பதால், அது இந்த கதையை ஊர்ஜிதப்படுத்துகின்றது. தியாகராஜ ஸ்வாமிகள் வாழ்ந்த திருமஞ்சன வீதியில் சென்று, கடைசியில், இடது புறமாக திரும்பினால், இந்த ருக்மிணி சமேத பாண்டுரங்கன் கோவில் இன்று சிறியதாக உள்ளது. ஒரு வேளை பூஜை நடைபெறுவதாக தெரிகின்றது. சமீபத்தில் திருவையாறு சென்று இந்த ருக்மிணி சமேத பாண்டுரங்கனை தரிசனம் செய்து வந்தோம்.

## சதஸ் எதற்கு?



காஞ்சி பெரிய பெரியவர் ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், அடிக்கடி, இந்தியா முழுவதும் உள்ள மஹான்களை அழைத்து, ஸதஸ் நடத்தி வந்தார். அந்த ஸதஸில் கலந்து கொள்வதற்கு, விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை சேர்ந்தவர்கள், த்வைத சித்தாந்தத்தை சேர்ந்தவர்கள் என பலரும் வருவார்கள். அப்படி வருபவர்களுக்கு, அவரவர்களுக்கு என்று சம்பிரதாயம், ஆச்சார்யர் இருப்பதால், அவர்கள் பெரியவர்களை சேவிக்க மாட்டார்கள். ஒருமுறை சதஸ் நடத்தியவருக்கு இது பிடிக்கவில்லை. அவர் பெரியவரிடம் வந்து "உங்களை சேவிக்காதவர்களுக்கு நான் ஸம்பாவணை தரப்போவதில்லை" என்றார். பெரியவர் சிறிது நேரம், மௌனமாக இருந்தார். பிறகு தரிசனம் செய்ய வரிசையாக வந்த பக்தர்கள், ஸேவிக்க ஆரம்பித்தனர். பெரியவர் ஸதஸ் நடத்தியவரை அழைத்து, "இவர்களுக்கு எல்லாம் நல்ல ஸம்பாவணை கொடு. இவன் என்னை நான்கு முறை ஸேவித்தான். இவனுக்கு அதிகமாக கொடு" என்றார். உடனே ஸதஸ் நடத்தியவர், "எதற்காக இவர்களுக்கு ஸம்பாவணை கொடுக்க வேண்டும்" என்றார். "நீதானே ஸேவிக்காதாவர்களுக்கு தரமாட்டேன் என்றாய்; அப்படியானால் ஸேவிப்பவர்களுக்கு கொடு" என்றார் மஹாஸ்வாமிகள். அந்த ஸதஸ் நடத்தியவர் அசடு வழிய நின்றார். உடனே பெரியவர் "என்னை ஸேவிப்பதற்காக நாம் ஸதஸ் நடத்தவில்லை. அதற்காக ஸம்பாவணையும் தரவில்லை. அவர்கள் படித்த படிப்பிற்கு ஸம்பாவணையும் மரியாதையும் கௌரவமும் நாம் தரவேண்டும்" என்றார்கள். ஸதஸ் நடத்தியவருக்கு இது ஒரு பாடமாக அமைந்தது.





## சனாதனப் புதிர் : பகுதி – 19 விடைகள்

–ஆத்ரேயன்

1. ஸோமகலாம்பிக ஸமேத பாணபுரீஸ்வர ஸ்வாமி, காமாக்ஷி சமேத ஏகாம்பரேஸ்வரர், விசாலாக்ஷி ஸமேத காசி விஸ்வநாதர், அமிர்தவல்லி ஸமேத அபிமுகேஸ்வரர், சௌந்தரநாயகி ஸமேத சௌரமேஸ்வரர், அமிர்தவள்ளி ஸமேத அமிர்தகலசநாதர் (சாக்கோட்டை), ஞானாம்பிகை ஸமேத காளஹஸ்தீஸ்வரர், ஸோமசுந்தரி ஸமேத ஸோமாஸ்கந்தர், ஆனந்தநிதியம்பிகை ஸமேத ஆதிகம்பட்டவிஸ்வநாதர், மங்களாம்பிகை ஸமேத ஆதிகும்பேஸ்வரர், பிரஹன்னாயகி ஸமேத நாகேஸ்வரர், பந்தாடுநாயகி ஸமேத கோடீஸ்வரர் (கொட்டையூர்)

2. ஜித்வர், உதங்கர், பர்க்கு, ஸத்யகாம ஜாபாலர், கர்த்பீவபீதர், விதக்தரு

3. வால்மீகி ராமாயணம் - கிஷ்கிந்தாகாண்டம் (5-12) - ஸுக்ரீவன் ராமரைப் பார்த்து கையை நீட்டுகிறான். நட்பு கொள்ள விரும்பினால் கையைப்பிடிக்க சொல்லுகிறான்.

4. திருத்தொண்டர் புராணம் - பெரிய புராணம் - சேக்கிழார்

5. மூலம் - ஹனுமார்

6. ஆவுடையார்கோவில் - உருவமற்ற சிவன், அம்பாள் (ஆத்மநாதர், யோகாம்பிகை) மற்றும் மூன்று பிள்ளையார். திருவாதவூரர் என்ற மாணிக்கவாசகர் கட்டிய கோவில்.

7. திருவையாற்றுக்கு அருகில் உள்ள தில்லைஸ்தானம் - திருநெய்ஸ்நானம், திருநெய்த்தானம் ஆகி, பிறகு தில்லைஸ்தானமாக மருவிற்று. ஸ்வாமியின் பெயர் நெய்யாடியப்பர்.

8. தில்லை விளாகத்திற்கு தெற்கே நான்காவது மைலில் கற்பனார் கோவில். அதற்கு அருகில் துளஜாப்பட்டினம். இங்கு ஔவையாருக்கு கோயில் இருக்கிறது.

9. திருத்துறைப்பூண்டி தாலுக்கா - அதிராமபட்டிணத்திற்கு 12கி.மீ. முன்பாக - நடராஜா மற்றும் ராமர், சீதை, லஷ்மணன், ஹனுமான். இதை தில்லை நகர், திருச்சித்ரகூடம் என்று சொல்கிறார்கள்.

10. கங்கா, காயத்ரி, கீதா, கோவிந்தா

# எம கீதை-3

-ஆத்ரேயன்

எமதர்மராஜன் தூதர்களுக்கு சொன்னது (சென்ற இதழ் தொடர்ச்சி) "ஹே! தூதனே! " கட்கம், சங்கு, கதை தரித்த பிறப்பு இறப்பு இல்லாத கடவுள், ஒருவன் மனதை ஆட்கொண்டவுடன் அவனது பாபம் பொசுங்கி விடுகிறது. எவன் பிறர் பொருளை அபகரிக்கிறானோ, எவன் பொய், பித்தலாட்டம் மேலும் கடும் சொற்களை பேசுகிறானோ, அப்படிப்பட்ட தீய வினைக்கு ஆளாகிய கெட்டவனிடம் கடவுள் இருப்பதில்லை. எவன் பிறர் பொருளை பார்த்து பொறாமைப்படுகிறானோ, எவன் பிறரை தூற்றுகிறானோ, நல்லவர்களுக்கு தீங்கு விளைவிக்கிறானோ, அவர்களிடம் கடவுள் இருப்பதில்லை. பொருள் இருந்தும், கடவுளை யார் பூஜை செய்வதில்லையோ, அல்லது கடவுளின் பக்தர்களுக்கு நன்மை செய்வதில்லையோ, அந்த மட்டமான மனிதன் இருக்கும் இடத்தில் ஜனார்த்தனன் வாஸம் செய்வது கிடையாது. எந்த தீயவன் தனக்கு நன்மை செய்யும் நண்பர்கள், உறவினர்கள், மனைவி, பெண், பிள்ளை, பெற்றோர்கள் மேலும் வேலைக்காரர்கள் இவர்களுக்காக பணத்தை செலவு செய்யாமல் கருமியாக இருக்கிறானோ, அவனை பக்தன் என்று கருதாதே! எவன் தீயகாரியங்களில் ஈடுபட்டவனாக இருக்கிறானோ, எவன் தீயவர்களோடு நட்பு கொண்டிருக்கிறானோ, சிறிதும் ஆசாரமின்றி கெட்டவனாக இருக்கிறானோ, அவன் தான் தினமும் செய்யும் பாப மூட்டையிலேயே, கட்டுண்டவனாக இருக்கிறான். அவனை கொடிய மிருகம் என்று சொல்லலாம். அவன் ஸ்ரீவாசுதேவனின் பக்தன் இல்லை.

எவன் கமலநயனா! வாசுதேவா! விஷ்ணோ! தரணிதரா! அச்சுதா! சங்கசக்ரபாணே! தாங்களே எனக்கு கதி என்று எப்பொழுதும் சொல்லிக்கொண்டு இருக்கிறானோ, அந்த நல்ல மனிதனுக்கு அருகாமையில் செல்லாதே. எந்த உத்தமமான மனிதனின் மனதில் எப்பொழுதும் பரம்பொருள் குடிகொண்டுள்ளாரோ, அவர் பார்வை எங்கு படுகிறதோ,



அவருடைய அருகில், நீயோ நானோ செல்ல அருகதையற்றவர்கள். அவனை விஷ்ணுவின் சக்கரம் காப்பாற்றும். அவன் வைகுண்டம் முதலான நல்ல லோகங்களுக்கு செல்லத்தகுந்தவன்.

கலிங்கத்து பிராமணர் சொல்லுகிறார்: பீஷ்மரே! இப்படியாக சூரியபுத்திரனான தர்மராஜன், தனது தூதர்களுக்கு ஆணை பிறப்பித்தான். யமனுக்கும், அவனது தூதர்களுக்கும் நடந்த சம்பாஷணையை முனிவர் எனக்கு சொல்ல, நான் உங்களிடம் கூறுகிறேன். பிறகு பீஷ்மர் சொல்லுகிறார்:

ஹே! நகுலனே! முன்னொரு காலத்தில் இருந்து வந்த, மஹாத்மா அந்தணர் முக மலர்ச்சியுடன் என்னிடம் சொன்னார். குழந்தாய்! ஆகவே, விஷ்ணுவைத் தவிர காப்பாற்றுபவர் யாரும் இல்லை. இந்த உண்மையை நான் உனக்கு உரைக்கிறேன். **எவனது மனம் எப்பொழுதும் கேசவன் பால் இருக்கிறதோ, அவனிடம் யமதூதர்களோ, யமபாசமோ, யமனோ வருவதற்கு சக்தியில்லாமல் ஆகிவிடுகிறார்கள்.** பராசரர் சொல்லுகிறார்: ஹே! முனிவரே! உனது கேள்விக்கான பதில் - "தர்மராஜன் என்ன சொன்னாரோ, அதை நான் உனக்கு சொல்லிவிட்டேன்".

EMS SPEEDPOST


Features

- 845 destinations in India /97 major countries around globe
- The maximum weight limit is 35 Kg.
- Money transfer / Insurance facility / Free pickup facility.
- Documents as well as merchandise service.
- Round the Clock Booking at select centres on all 365days
- Book now pay later scheme.
- Computerized extension counters at customer premises

## சனாதனப் புதிர் - பகுதி - 20

( விடைகள் அடுத்த இதழில்)

–ஆத்ரேயன்



1. அத்புத ராமாயணத்தை எழுதியவர் யார்? எத்தனை ஸ்லோகங்கள்? எத்தனை ஸர்க்கங்கள்? 25வது சர்க்கத்தின் விசேஷம் என்ன?

2.சாயா சீதை(மாயா சீதை) எந்த ராமாயணத்தில் காணப்படுகிறது? அந்த ராமாயணத்தின் பெயர் என்ன? எத்தனை ஸ்லோகங்கள்? இதன் மற்ற விசேஷம் என்ன?

3.தசமஹாவித்யா -இதில் எத்தனை தெய்வங்கள் ஆராதிக்கப்படுகின்றன? தெய்வங்களின் பெயர் என்ன?

4. ப்ரஹ்மவாதினி என்பவர் யார்?.




5. வைகாச பௌர்ணமிக்கும் புத்தருக்கும் என்ன சம்பந்தம்?

6.ஸ்வாமி தயானந்த சரஸ்வதியின் பெயர் என்ன? இவரது பெற்றோர், பிறந்த இடம், மற்ற விவரங்கள் என்ன?

7.சாருவாஹ தர்சனம் என்பது என்ன?

8. ஆதித்ய தீர்த்தம் எங்கே இருக்கிறது?

9. த்ரிஸ்தலி என்று எதை சொல்லுகிறார்கள்?



10.சனாதன மதத்தை அனுசரித்து பாரததேசத்தில் சாம்ராஜ்யம் அமைக்க காரணமாக இருந்த மூவர் யார்?



அறிவிப்பு

அன்பர்கள், ஆஸ்ரமத்திற்கு வருகையில், குறிப்பாக உத்ஸவ காலங்களிலும், ஏகாதசி போன்ற சுபதினங்களிலும் தயவுசெய்து, விலைஉயர்ந்த ஆபரணங்களையும், பொருட்களையும் கொண்டுவர வேண்டாம். அவற்றிற்கு நிர்வாகம் பொறுப்பேற்காது.

☆ மாதமிருமுறை வெளியாகும் "திரிசக்தி" ஆன்மீக இதழில் ஸ்ரீஸ்வாமிஜி எழுதும் "ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே" எனும் தொடர் வெளியாகி வருகிறது. அன்பர்கள் படித்து பயனுறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மதுரமுரளி சந்தாதாரர்கள் ஆக விரும்புகிறவர்கள்

Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue , Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை/ டி.டி./ மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். PH:+914424895875




# பாலகர்களுக்கு ஒரு கதை



## தன்னம்பிக்கையில் சந்தேகம் வேண்டாம்

ஒரு சிறுவன் பள்ளிப்படிப்பை முடித்து விட்டு, வியாபாரம் செய்ய ஆரம்பித்தான். ஆனால் அவனால் வியாபாரம் செய்ய முடியவில்லை. ஒருவரை பார்த்தால், இவர் நம்மை ஏமாற்றி விடுவாரோ என்று தோன்றும். வேறு ஒருவரை பார்த்தால், இவனை நம்ப முடியாது போல் உள்ளதே என்று நினைப்பான். இப்படி யாரை பார்த்தாலும், அவரை பற்றி தவறான எண்ணங்களும், எதிர்மறையான எண்ணங்களும் வந்து கொண்டே இருந்தன. அதனால், அவனால் எந்த செயலும் செய்ய முடியவில்லை. சோர்ந்து தளர்ந்து போனான்.

அப்பொழுது ஒரு பெரியவரை தற்செயலாக பார்த்தான். அவன் அப்படி இருப்பதற்கு காரணம் கேட்டார். அவன், "யாரையும் என்னால் சந்தேகப்படாமல் இருக்க முடியவில்லை. யாரையும் என்னால் நம்ப முடியவில்லை" என்றான். மேலும், அதனால், தான், நிம்மதி இல்லாமல் தவிப்பதாகவும் தெரிவித்தான்.

உடனே அந்த பெரியவர், "கவலைப்படாதே! உன்னை நம்பு! உன்னை சந்தேகப்படாதே. அது போதும்; நிலைமை மாறி விடும்" என்றார். முதலில் அவனுக்கு அது புரியவில்லை. போகப்போக புரிய ஆரம்பித்தது.



ஒருவரை பார்த்தவுடன் இவன் ஏமாற்றுக்காரனோ என்ற எண்ணம் முன் போல் வந்தது. உடனே என்னை நான் நம்ப வேண்டும்; இவன் ஏமாற்றுக்காரனாக இருந்தால், அதை கண்டுபிடிக்க என்னால் முடியும் என்ற நம்பிக்கை, தலை தூக்கியது.



அப்படியே அவன் ஏமாற்றினாலும், என்னுடைய அறிவிலும் ஆற்றலிலும் எனக்கு சந்தேகமே கிடையாது; அவனை எப்படி சமாளிக்க வேண்டும் என்பதையும் நான் அறிவேன் என்று நினைக்க ஆரம்பித்தான்.

பிறகு என்ன? வாழ்க்கையில் கொஞ்சம் கொஞ்சமாக வெற்றி பெற்று, பெரிய BUSINESS MAGNATE ஆனான் என்று சொல்லவும் வேண்டுமோ? முதலில் உங்களை நம்புங்கள். உங்களுடைய ஆற்றலை சந்தேகப்படாதீர்கள். வெற்றி உங்களை தேடி வரும்.

> கவலைப்படாதே! உன்னை நம்பு! உன்னை சந்தேகப்படாதே. அது போதும்; நிலைமை மாறி விடும்.




*<u>சென்ற மாத நிகழ்ச்சிகள்</u>*

**ஆகஸ்டு 22 - குடியாத்தம் அருகில்** K.**வளசை** என்னும் ஊரில் நடந்த ஆஞ்சநேயர் மற்றும் பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகத்தில், ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள். ஊர்மக்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆகஸ்டு 26 - வாலாஜா அருகே தாமரைப்பாக்கத்தில்** ஸ்ரீரங்கநாதபெருமாள் தியான மண்டபத்தை திறந்து வைத்து ஸ்ரீஸ்வாமிஜி அருளுரையாற்றினார்.

**ஆகஸ்டு 27 - திருவண்ணாமலை அருகே உள்ள பொலக்குணம்** எனும் ஊரில் நடந்த பிள்ளையார் கோவில் கும்பாபிஷேகத்தில், ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள்.

**ஆகஸ்டு 30** மாலை **திருச்சி** அம்மாமண்டபம் ராமானுஜர் கூடத்தில் திருச்சி மற்றும் அதனை சுற்றி உள்ள ஊர்களிலுள்ள நாமத்வார் ஒருங்கிணைப்பாளர்களின் சந்திப்பு நடந்தது. இதில் கலந்து கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஸ்ரீரங்கத்தின் பெருமையையும் மஹாமந்திரத்தின் மஹிமையையும் தமது அருளுரையில் பேசினார்கள். திருச்சி நாமத்வார் பொறுப்பாளர் திரு.பாகவததாஸ் மற்றும் சில திருச்சி அன்பர்கள் மஹாமந்திர கீர்த்தனம் பற்றிய தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். அன்று **திருச்சி நாமத்வாருக்கு** ஸ்ரீஸ்வாமிஜி விஜயம் செய்திருந்தார்.

**செப்டம்பர் 1 - 10- மதுரபுரி ஆஸ்ரமத்தில்** மிகவும் விமரிசையாக **மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனின் பதினேழாவது ப்ரும்மோத்ஸவம்** கொண்டாடப்பட்டது. **முதல்நாள்** காலை கோகுலாஷ்டமியை முன்னிட்டு, **சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீனிவாச பெருமாளுக்கு** விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. மதுரபுரி ஆஸ்ரமத்தில் நந்தோத்ஸவத்தன்று, பூஜை, பஜனை, திவ்யநாமம், அவதாரகட்ட பாகவத பாராயணம், குழந்தைகள் கோலாட்டத்துடன் கொண்டாடப்பட்டது. ஸ்ரீஸ்வாமிஜி அனைவருக்கும் தீர்த்தபிரசாதம்



வழங்கினார். மறுநாள், சேஷவாஹனத்தில் பிரேமிகவரதன் கம்பீரமாய் வலம் வந்தான். நான்காம் நாள் ஏகாதசியன்று கருடவாஹனத்தில், ப்ரேமிகவரதன் ஜயஆஞ்சநேயர் சன்னதியில் ஸ்ரீஸ்வாமிஜியுடன் நின்றது கண்கொள்ளாக்காட்சி. ஐந்தாம் நாள் அதிகாலை மதுராசல மலையில் கோவிந்தபட்டாபிஷேகம் நடைபெற்றது. அன்று மாலை "வாரகரீ" அபங்கபஜனைக்கு பிறகு, யானை வாஹனத்தில் பிரேமிகவரதன் எழுந்தருளினான். தினமும் புஷ்ப அலங்காரத்தில் பிரேமிகவரதனும் ஜய ஆஞ்சநேயரும் ஜொலித்தனர் என்றுதான் சொல்ல வேண்டும்.வெள்ளிகவசத்துடன் ஒய்யாரமாய் நின்ற கல்யாணஸ்ரீனிவாசரின் சன்னதியில் தினமும் அன்பர்களால் பாகவத பாராயணம் செய்யப்பட்டது. ஆறாம்நாள் உற்சவர் பக்தகுதூஹலருக்கு ஸ்ரீஸ்வாமிஜியும் அன்பர்களும் கலந்துகொள்ள வெண்ணெய் தாழி உற்சவம் நடந்தது. ஏழாம் நாள் நிகுஞ்சோத்ஸவத்தில், அற்புதமான பிருந்தாவன அலங்கார குடிலில் பிரேமிகவரதன் மாதுரிஸகீயுடன் எழுந்தருளினான். வீணாகானமும் பக்தி கீர்த்தனங்களும் பாடப்பட்டன. எட்டாம் நாள் ஜானவாசம் அமோகமாய் நடந்தது. அன்று நாதஸ்வர இசை முழங்க ஸ்ரீஸ்வாமிஜி திவ்யதம்பதிகளுக்கு மாலை மாற்றினார். மறுநாள் வெகு விமரிசையான புஷ்பாலங்காரத்துடன், பூஜாமண்டபத்தில் ராதாகல்யாணம் அஷ்டபதி பஜனையுடன் நடந்தேறியது. எல்லா நாளும் போல் வந்திருந்த அனைவருக்கும் ஸ்ரீஸ்வாமிஜி தீர்த்தபிரசாதம் தமது திருக்கரங்களால் வழங்கினார். அனைத்து நாட்களும் ஸ்ரீஸ்வாமிஜியின் பாகவத உபன்யாசத்தை காலையிலும்



மாலையிலும் இருந்து சிரவணம் செய்தவர்களின் பாக்யத்தை கூறமுடியாது. பாகவதத்தில் மிகவும் முக்கியமான சரித்திரங்களை, ப்ரதிபதார்த்த அர்த்தங்களுடன் ஸ்ரீஸ்வாமிஜி உபன்யாசம் செய்தார். பிரேமிக வரதன் அலங்காரம், ஒவ்வொரு நாளும் விதம்விதமாக இருந்தது. வெள்ளி ரதத்தில் பவனி முடித்து அவப்ருதஸ்நானமும், ஆஞ்சநேயர் உற்சவமும் பத்தாம் நாள் அழகாய் பூர்த்தியானது. கோவிந்தபட்டாபிஷேகத்தன்று, மூவாயிரம் அன்பர்கள் வந்திருந்தனர். அன்று பெரும்பாலானோர் மலை மேல் அமர்ந்தது வெகு ஆச்சரியம். ஒருநாளேனும் அன்பர் கூட்டம் ஆயிரத்துக்கும் குறையவே இல்லை. வந்திருந்த





அனைவருக்கும் மூன்று வேளை அன்னதானம் வெகு விமரிசையாய் அளிக்கப்பட்டது.

**செப்டம்பர்12 - சென்னை பாரதிதாசன் காலனி புவனேச்வரி அம்மன்** கோவிலில், அம்மனுக்கு வெள்ளி பிரபை சாற்றும் வைபவத்தில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்துகொண்டார்.



## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி

### ஸ்வாமி க்ருஷ்ணானந்தஜி-1



ஸ்வாமி க்ருஷ்ணானந்தஜியினுடைய பூர்வாஸ்ரம பெயர் ஸ்ரீகர்மசந்த என்பதாகும். அவர் 1883ஆம் ஆண்டு பஞ்சாப் பிரதேசத்திலுள்ள புண்டலா எனும் கிராமத்தில் பிறந்தார். அவரது பெற்றோர்கள் கௌட பிராம்மணர்கள். அவரது தந்தையின் பெயர் ஸ்ரீபோலாராம். தாயின் பெயர் ஸ்ரீமதி ரலீ. இவர்கள் மிகவும் சதாசாரம் உடையவர்கள். தர்மாத்மாக்கள். அவர்கள் அதிக நேரம் கீதை, ராமாயணம் பாராயணத்திலும் ஸாதுக்களின் சங்கத்திலுமே கழித்தார்கள்.

பெற்றோர்களின் செயலின் பாதிப்பு சிறுவன் கர்மசந்தின் மேல் ஏற்படுவது இயற்கைதானே? அவன் த்ருவன், ப்ரஹ்லாத சரித்திரங்களை மிகவும் கூர்ந்து கவனித்து கேட்பான். இயற்கையாகவே ஹிந்தி மற்றும் ஸமஸ்க்ருதம் கற்பதில், அவனுக்கு ஆவல் இருந்தது. அவனது பெற்றோர்கள், அவனை, ஆங்கிலம் பயிலும் பொருட்டு, கால்கா கிராமத்தில் ஸ்ரீதௌலத்ராம்ஜி என்ற அவரது பெரிய அண்ணனிடம் அனுப்பி வைத்தார்கள்.

கர்மசந்திற்கு வயது பதினான்கு ஆனது. முன்பே தனது வாழ்வின் குறிக்கோளை அவன் தீர்மானம் செய்து விட்டான். த்ருவன், ப்ரஹ்லாதனை போல் ஸாதனை மயமான வாழ்க்கை வாழ்ந்து பகவத்ஸாக்ஷாத்காரத்தை அடைவதே அவனது குறிக்கோள். இக்குறிக்கோளிற்கும், ஆங்கில படிப்பிற்கும் எவ்விதமான ஸம்பந்தமும் இருப்பதாக அவன் நினைக்கவில்லை. ஆனால் அவனது பெற்றோர்கள், அவனது உயர்ந்த ஸம்ஸ்காரத்தினால் ஸந்தோஷமடைந்த போதிலும் , அவன் ஒரு உயர் பதவியில் உத்தியோகம் செய்யவேண்டுமென்றெண்ணி அவனுக்கு ஆங்கிலம் பயில்விக்க, தீவிரமாக இருந்தனர்.

கர்மசந்த் தனது வாழ்வின் ஒரு முக்கியமான நாற்சந்தில் நின்றான். அங்கிருந்து எந்த பக்கம் செல்வது என்ற முக்கியமான முடிவு எடுக்க வேண்டும். பெற்றோர்களின் ஆசைக்கு இணங்கினால், தனது லக்ஷியத்தை அடைவதற்கு மிகவும் தடங்கல் ஏற்படும் என்று அவன் எண்ணினான். அதனால், ஸம்ஸாரத்தை உதறி விட்டு, ஸ்வச்சந்தமான பாதையில் செல்வது என்ற முடிவை எடுத்தான்.

கர்மசந்த் வீட்டை துறந்து, காசி கிளம்பி விட்டான். விஸ்வநாதரை தரிசனம் செய்து, மானஸீகமாக அவரிடம் பிரார்த்தனை செய்தவாறே கங்கை கரையில் அமர்ந்தான். அவனுடைய தேஜஸ் மற்றும் ஒளியை பார்த்து, அங்கிருந்த மடாதிபதி ஒருவர் அவனிடம் "குழந்தாய்! நீ எங்கிருந்து வருகிறாய்? என்ன சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறாய்?" என்று வினவினார்.

கர்மசந்த் தனது முழு விருத்தாந்தத்தையும் கூறினான். சாஸ்திரம் படிக்கவும், ஸந்யாஸம் பெற்று கொள்ளவும் தனக்கு விருப்பம் என்பதையும் கூறினான். மடாதிபதியும் இப்படியொரு இளைஞனையே தேடிக்கொண்டிருந்தார். அவனுடைய படிப்பிற்கு தகுந்த ஏற்பாடு செய்வதாகக்கூறி தன்னுடன் மடத்திற்கு அழைத்து சென்றார்.

பத்து வருடங்கள் அந்த மடத்தில் தங்கி ஸம்ஸ்கிருத வியாகரணம், ந்யாஸம், மீமாம்ஸை, சங்கர வேதாந்தம் போன்றவற்றை கற்றான். இதனிடையில் ஸந்யாஸமும் பெற்றுக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணாநந்தா எனும் தீக்ஷை நாமமுடன் விளங்கினார். ஸ்வாமி கிருஷ்ணானந்தாஜியிடமே மடத்தின் அனைத்து பொறுப்புகளையும் ஒப்படைத்து விடுவதாக மடாதிபதி முடிவு செய்திருந்தார். அதற்கான நல்ல நேரத்தை எதிர்பார்த்து கொண்டிருந்தார். ஆனால் நடந்தது என்ன?

(தொடரும்)



## மாலே மணிவண்ணா – 88

—மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

நான்காவது பாடலின் திரண்ட பொருட்சுருக்கத்தை முழுமையாகக் காண்போம்.

திருமாலே, பொறிகள் ஐந்தையும் மயக்கமற நீக்கி மைத்திரி, கருணை, முதிதை, இகழ்ச்சி என்னும் நான்கினாலும் சித்தத்தை தூய அழகுடையதாக செய்து, ஒன்றியிருந்து உன்னை நினையும் அன்பர்கள், உன்னைத்தொழுது, தோத்திரித்து, நின் புகழை விரித்து கூறினர். அப்புகழ்கள் எல்லாம், நின் இயல்பானவே அல்லாமல், செயற்கையாக வந்தனவென்று வியக்கப் படுவனவல்ல. இவ்வுண்மை அறிந்தும் அத்தகைய அன்பரல்லாத நாங்கள், நின் புகழ்களுள் சிலவற்றை இங்கும் அங்குமாக பிறழ கூறி தோத்திரிக்கிறோம். அது கண்டு நீ சிரித்தாலும் தகுதியே. அதனால் நாங்கள் கூறுவதையும் நிறுத்த மாட்டோம்.

நின்னுடைய திருமேனி, நீலமணியும் அலையடங்கிய கடலையும் நீர் கொண்ட மேகத்தையும் போன்றது. நீலமேனியுடன் மாறுபட்ட பொன்னாடையை உடையவன் நீ.

இயல்பாகவே சிவந்த கண்களை உடையவன் நீ. பிரஹலாதன் நின்னை புகழ, அவனை இரணியன் சினத்தால் துன்புறுத்திய பொழுது பிரஹலாதனுடைய நெஞ்சிலே பொருந்திய நீ, தூணிலிருந்து புறப்பட்டு, அவ்விரணியனது மார்பை வகிர்ந்த நகத்தை உடையாய்!

முன்னொரு காலத்தில் பூமி வெள்ளத்தில் அழுந்திய பொழுது ஆதி வராகம் ஆகி, கழுத்தால் தாங்கி, பூமியை வெள்ளத்திலிருந்து எடுத்து காத்த நின் செயல், உலகை நிலை நிறுத்தி தாங்கும் மேருவின் செயலை போலும்.

நின் வெம்மையும், ஒளியும் சூரியனிடத்து உள்ளன. நின் குளிர்ச்சியும், மென்மையும் சந்திரனிடத்து உள்ளன. நின் பொழிதலும், வண்மையும் மழையின் கண் உள்ளன. நின் சுமக்கும்

தன்மையும், பொறுமையும் பூமியின் கண் உள்ளன. நின் மணமும்,, ஒட்பமும் காயாம்பூவின் கண் உள்ளன. நின் தோற்றமும், பெருமையும் நீரிடனிடத்து உள்ளன. நின் உருவமும், ஒலியும் ஆகாயத்திடத்து உள்ளன. நின் வருகையும், ஒடுக்கமும் காற்றிடனிடத்து உள்ளன. ஆகவே, எல்லாம் உன்னிடத்திருந்து தோன்றி, உன்னால் காக்கப்பெற்று, உன்னிடத்தில் ஒடுங்குகின்றன என்பது விளங்குகிறது.

கருடக்கொடியை உடையவன் நீ. உனக்கு பனைமரம், கலப்பை, யானை என்பனவும் கொடிகளாயினும் கருடக்கொடி போல் அவை சிறந்தனவல்ல. கருடன் பாம்பின் உடலையும், உயிரையும் ஒரு சேர உண்ணும் ஆற்றல் உடையவன். அவன் வயிற்றின் மேல் கட்டப்பட்டிருப்பது பாம்பு, அவனது கொடி, கண்ணிகள், கழுத்தணி, தலைச்சூட்டு, சிறகுகளின் மேல் இருப்பன எல்லாம் பாம்பு, நின் கொடியாக இருக்கும் அவனது இரையும் பாம்பு. நீ பகைவரின் செருக்கை அடக்கியவன்.

கோபமும், அருளும், ஒருதலை அன்பும், நடுவு நிலைமையும், இவற்றை மறமும், அறமும் உடையாரிடத்து முறையே உடையை, இல்லாரிடத்து இல்லாய் ; இதுவே உண்மை. அன்றி பகைவர் உயிரை நீக்குதலும், நட்டோர் உயிரை பாதுகாத்தலும், நினக்கு இல்லை. ஏனென்றால், உனக்கு பகைவரும் இல்லை; நட்டோரும் இல்லை. உயிர்களின் இயல்பால், உனக்கு வேண்டுதல் வேண்டாமை உள்ளன போல தோன்றினும், உண்மையில் அவை உனக்கு இல்லை. நின் அன்பர் மனத்திற் கொண்ட வடிவமே உனக்கு வடிவம். உனக்கு என வேறு திருவுருவம் உடையை இல்லை. நீலமணி போன்ற திருமேனியில் மணங்கமழ் துளவமாலையை உடையாய். பொன்மயமான ஸ்ரீவத்சமாகிய மறுவுடை மார்பன் நீ. நின் கொப்பூழில் தோன்றிய தாமரை போன்ற கண்களை உடையாய். அளவிடுதற்கு அரியவன் நீ.

வீடு அளிக்கும்போது உன்னைக்காட்டிலும், சிறந்த தாள்



இணைகளை உடையவன் நீ . நிறைந்த கடவுள் தன்மையை உடையவன்; இன்னும் நின்பால் உள்ள பல்வேறு குணங்கள், நின்னை ஒத்த, முனிவர்கள் உணரும் உபநிடதப்பொருளாகும்; எம்மால் உணர இயலாதன.

ஆலமரம், கடம்ப மரம், ஆற்றிடைத்துருத்தி, மலை ஆகிய இடங்களில் உள்ள பல தெய்வங்களாக அவ்வப்பெயரில் நீயே உள்ளாய். எங்கும் நீயே நிறைந்து இருக்கின்றாய். நின் அன்பர்கள் தொழுத கையின் வணக்கத்தின் கண், எளிமையாக அகப்பட்டுக்கொள்பவன் நீ. அவ்வன்பர்களுக்கு ஏவலாளனாக இருப்பவனும் நீயே. அவர்கள் இவ்வுலகில் செய்யும் அறம், பொருள், இன்ப, வீடுகளுக்குரிய கருவிகளாக இருப்பவனும், கருவிகளைத்தருபவனும் நீயே. அவற்றால் செய்யப்படும் அவரது வினைகளை, அவ்வவரே அனுபவிக்கும்படி, பக்குவக்காலத்தில் வகுத்து அனுபவிக்க செய்யும் பாதுகாவலனும் நீயே. உன்னையன்றி வேறு எதுவும் இல்லை. எமக்கு அருளுக.

(தொடரும்)



**கோகுலாஷ்டமியை முன்னிட்டு, சென்னை ப்ரேமிகபவனத்தில் ஸ்ரீனிவாச பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம்**

## அக்ஷரமணமாலை (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-173)

மைமயணீத்தருண் மையினாலுனதுண்
மைவசமாக்கினை யருணாசலா(84)

சாஸ்திரங்கள் கண்ணுக்கு தெரியாத தெய்வீகமான விஷயங்களை பற்றியே பேசுகின்றன. நம்மால் நேரடியாக பார்த்து புரிந்து கொள்ள முடியாத விஷயங்களுக்கு, அவையே பிரமாணம். அவையோ, உலக வாழ்வின் இலட்சியம், மாயையிலிருந்து விடுபட்டு ஆன்ம சாக்ஷாத்காரம் அடைவது என்கின்றன. சாஸ்திரங்களில் உள்ளவையை கேட்பதனால் மட்டும் கூட, பிரயோஜனம் உண்டு. உலகில் பழகும்போழுதும் கூட, உலகம் மித்யை என யார் அறிவினால் மட்டுமே உணர்கிறார்களோ, அவர்களுக்கு ஒரு நிம்மதி ஏற்படுகிறது என்பதை மறுக்க முடியாது. "ஆன்மாவை அடைய எவன் சிறிது முயற்சிக்கிறானோ, அவன் மிக புண்ணிய லோகங்களை அடைவான்; மேலும் மறு பிறவிகளில் அவனது சாதனையை தொடருவான்" என சாஸ்திரங்கள் சொல்கின்றன.

ஆயின் சாஸ்திரம் சொல்வதை ஒருவர் அப்யாசத்தில் கொண்டு வர வேண்டும். சர்க்கரைதான் தித்திப்பு. சர்க்கரை என சொல்வதால் தித்திப்பு இல்லை. அப்யாசம் பிசுபிசுத்ததாக இல்லாமல், தீவிரமாய் இருந்தால்தான் இது சாத்தியம் . தியானத்தில் அமருபவனுக்குத்தான், இம்மனதானது எப்படி திமிறிக்கொண்டு ஓடுகிறது என்பது தெரியும். மற்றவர்களுக்கு தெரியாது. ஆன்ம சாக்ஷாத்காரம் அடையாமல் இருக்கலாமே, நான் சௌக்கியமாகத்தானே இருக்கிறேன் என ஒருவர் சொல்லலாம். காரில் செல்கிறோம். ஆரம்பத்தில் நன்றாக இருக்கிறது. தொடர்ந்து கார் சென்று கொண்டே இருக்குமானால், பயணம் போர் அடிக்கிறது. இளமையில் உலக வாழ்க்கை ருசிக்கிறது. வயதானபின், சரீரம் அசதியான பின், உலக வாழ்க்கையில் கஷ்டங்கள் வருகையில், வாழ்க்கை கசக்கிறது. ஆக ஆன்மாவை அடைவதே முக்கியம்.

மனம் சொன்னதை கேட்காது. அது அப்யாசத்திற்குதான் கட்டுப்படும். ஒரு முல்லைக்கொடி பக்கத்து வீட்டிற்கு படர்ந்து மலருகிறது எனில், அதை சரிப்படுத்தி நமது பக்கம் எடுத்து விடுகிறோம்; இருப்பினும், அது மறுநாள், பக்கத்து வீட்டிற்கே செல்லும். மாறாக, முல்லைக்கொடியை நம் வீட்டு பக்கத்தில், ஒரு கம்பை நட்டு, அதில் படர விட்டால், அது பக்கத்து வீட்டிற்கு செல்லாது. அப்படியே மனதை உலக விஷயங்களில் இருந்து திருப்ப, வேறு ஒன்றை மனது பிடிக்க வேண்டும். அதுதான் இறைவனின் சரணம். நெடுங்காலமாய், பல பிறவிகளில், உலக விஷயங்களை நோக்கி ஓடிய மனதானது ஒருக்காலும் சுலபத்தில் அடங்காது. அப்படி உலக விஷயங்களில், மயங்கி கிடக்கும் இம்மனத்தை பகவான் தனது வசமாக்கி கொண்டான் எனில், அது



அடங்கி விடும். எப்படி எனில், பகவான் சிறிது காட்சி கொடுத்தாலும், சிறிது அனுபவம் தந்தாலும் இம்மனது உலகத்தில் செல்லாது. மேலான இன்பத்திற்குதான் மனது ஏங்கும். ஆயின் எந்த ஒரு நன்மையிலும் ஒரு கஷ்டமும் உண்டு. ரோஜாவை சுற்றி முள்ளும் தேன்கூட்டை சுற்றி தேனீக்களும் உண்டே? அதுபோல் சாதனா கிராமத்தில் சிரமங்களும் உண்டு. அதை பொருட்படுத்தலாகாது.

மைமயல் -மயல் என்றால் மயக்குவது என அர்த்தம். இவ்வுலக மாயையானது நம்மை எப்பொழுதும் மயக்குகிறது. பகவான் தனது கருணையால்(அருள் எனும் "மை"யினால்) ஆன்மானுபவத்தை தருவானாகில், உலக மாயையானது நம்மை விட்டு நீங்கி விடும். அப்படி, அருணாசலா, உன்னருளால், மாயை நீங்கிய மனது, உன்னையே வந்தடைந்தது என்கிறார் ரமண மகரிஷிகள். (தொடரும்)

Madhuramurali
- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

### ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| செப் 22 | சைதன்ய குடீரம் ஆண்டு விழா |
| அக்-4, 18 நவ-2,17 | ஏகாதசி |
| அக் -3 | ஸ்ரீஅப்பய்ய தீக்ஷிதர் புத்தக வெளியீட்டு விழா - மயிலை |
| அக் - 8 | நவராத்திரி ஆரம்பம் |
| அக்-9 | திருப்பூர் கூட்டு பிரார்த்தனை |
| அக்-10 | உடுமலைப்பேட்டை கூட்டு பிரார்த்தனை |
| அக் - 17 | ப்ரேமிகபவன ஸ்ரீனிவாசபெருமாள் அவதார தினம் விஜயதசமி |
| அக்-24 | SRK மஹால், உள்ளகரம் |
| அக்-28 | சாந்தீபனி குருகுல பாடசாலை.பூமி பூஜை - ஹைதராபாத் |
| நவ 5 | ஸ்ரீஸ்வாமிஜியின் பாடல்கள் பஜனை - நாரதகான சபா |
| நவ 6 | ஸ்ரீஸ்வாமிஜியின் திருநக்ஷத்திரம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.